# வணிகவரித்துறை
# மானியக் கோரிக்கை எண் 10
# வணிகவரிகள்
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2007 – 2008

## முன்னுரை

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பெருக்குவதற்காகவும், தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அத்தகைய திட்டங்களுக்கு தேவைப்படும் நிதியில், சுமார் 70 சதவிகிதம் வணிகவரித்துறையால் ஈட்டப்படுகிறது. வணிகவரித் துறையில் 2006 – 2007 ஆம் ஆண்டில் (பிப்ரவரி மாதம் வரை) ரூ.17,601.49 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 17.33 விழுக்காடு அதிகம் ஆகும்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959, 31.12.2006 அன்றுடன் முடிவடைந்து 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், 2006 தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டது.

## வணிகவரித்துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

2. வரி வசூலுக்கென கீழ்க்கண்ட சட்டங்கள் வணிகவரித்துறையினால் நிர்வகிக்கப்படுகின்றன :-

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1.1.2007 முதல்)
2. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959 (31.12.2006 வரை)
4. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், 1970 (31.12.2006 வரை)
5. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச்சட்டம், 1990
6. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
7. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
8. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
9. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
10. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

## கடந்த ஆண்டுகளின் வரிவருவாய் ஒப்பீடு

3. கடந்த ஆண்டுகளில் அனைத்து விற்பனை வரிச்சட்டத்தின் மூலம் ஈட்டிய வரிவருவாய் விவரம் வருமாறு

## ஆண்டு வரிவருவாய் (ரூபாய் கோடியில்) வளர்ச்சி விகிதம் (%)

| Year | Revenue collections (Rs. in crore) | Growth rate % |
|---|---|---|
| 2000 – 2001 | 8664 | 17.38% |
| 2001 – 2002 | 8905 | 2.78% |
| 2002 – 2003 | 10200 | 14.55% |
| 2003 – 2004 | 11757 | 15.27% |
| 2004 – 2005 | 13908 | 18.29% |
| 2005 – 2006 | 16615 | 19.47% |
| 2006 – 2007 (பிப்ரவரி வரை) | 17601* | 17.33% |

* கருவூல தொகையுடன் சரிபார்க்கப்படவில்லை

## கடந்த ஆண்டுகளின் வரிவருவாய் ஒப்பீடு – சட்டவாரியாக

**4.** சட்ட வாரியாக வருவாய் விவரம் வருமாறு :-

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 | 2006-2007 (பிப்ரவரி 2007 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. த.நா.பொது விற்பனை வரிச் சட்டம் | 7354 | 7541 | 8507 | 9790 | 11462 | 13658 | 14392.21 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 862 | 904 | 982 | 1186 | 1495 | 1799 | 1868.00 |
| 3. கேளிக்கை வரிச் சட்டம் | 74 | 68 | 71 | 75 | 59 | 44 | 23.59 |
| 4. பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 5 | 5 | 6 | 6 | 5.53 |
| 5. ஆடம்பர வரிச் சட்டம் | 92 | 89 | 82 | 63 | 78 | 92 | 114.93 |
| 6. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 276 | 297 | 553 | 638 | 808 | 1016 | 1197.23 |
| மொத்தம் | **8664** | **8905** | **10200** | **11757** | **13908** | **16615** | **17601.49*** |

* கருவூல தொகையுடன் சரிபார்க்கப்பட வேண்டும்.

## வருவாயும் செலவும்

5. வணிகவரித் துறையின் வருவாயும், செலவும் வருமாறு :-

(ரூபாய் கோடியில்)

| | தலைப்பு | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07* |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வரிவருவாய் | 8905 | 10200 | 11757 | 13908 | 16615 | 17601.49 |
| 2. | செலவுகள் | 94.23 | 93.27 | 93.70 | 102.34 | 110.44 | 128.52 |
| 3. | செலவின் விழுக்காடு | 1.06% | 0.91% | 0.80% | 0.74% | 0.66% | 0.79% |

## மதிப்புக் கூட்டு வரி

6. 22.7.2006 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி இம்மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 இயற்றப்பட்டு 1.1.2007 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலிருந்து, தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திற்கு மாறும் முறை மிகவும் எளிதாகவும் தடைகளற்றும் செயல்படுத்தப்பட்டது. இதனை வணிக மற்றும் தொழிலகங்கள் வரவேற்றன. மதிப்புக் கூட்டு வரி உத்திரப்பிரதேசம் மற்றும் புதுச்சேரி தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தவில்லை எனில் மதிப்புக் கூட்டு வரியினுடைய பயன்களை பெறுவதற்கு இங்குள்ள தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வணிகர்கள் வெளி மாநிலத்திற்கு இடம் பெயரும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. அதே போன்று புதிதாக தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வணிகர்கள் நமது மாநிலத்திற்கு வராமலிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. இதனை கருத்தில் கொண்டுதான் மதிப்புக் கூட்டு வரியினை காலம் தாழ்த்தாமல் தமிழ்நாட்டில் 1.1.2007 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

மதிப்புக் கூட்டு வரியில் மிகவும் குறைந்த வரிவிகிதமான 1 விழுக்காடு தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களுக்கும்; 4 விழுக்காடு அத்தியாவசியப் பொருட்கள், தொழிலக உள்ளீடுகள், மூலதனப் பொருட்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பப் பொருட்கள் ஆகியவற்றின் மீதும், பிற பொருட்கள் மீது 12.5 விழுக்காடு வரியும் நிர்ணயிக்கப்பட்டன. இந்த வரிவிதிப்பு முறையில், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் செலுத்திய உள்ளீட்டு வரியினை விற்பனை செய்யும் போது செலுத்தக் கூடிய விற்பனை வரியிலிருந்து கழித்துக் கொள்ள இயலும். மாநிலத்திற்குள்ளேயே கொள்முதலும் விற்பனையும் செய்யும் சிறு வணிகர்களின் மொத்த விற்பனைத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் (கேரளா தவிர, மற்ற மாநிலங்களில் ரு. 5 லட்சம் மட்டுமே), அவர்களுக்குப் பதிவுச் சான்று பெறுவதிலிருந்தும், வரி செலுத்துவதிலிருந்தும், விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூ.10 இலட்சத்திற்கு மேலும், ரூ.50

இலட்சத்திற்கு மிகாமலும் இருப்பின், அவர்கள் தங்கள் விருப்பப்படி இணக்க வரி முறையை ஏற்று, அரை விழுக்காடு (கேரளா தவிர, மற்ற மாநிலங்களில் இணக்க வரி ஒரு விழுக்காடு) வரி செலுத்தலாம். கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி மற்றும் உபரி வரி ஆகியன அறவே நீக்கப்பட்டுள்ளன. இத்துடன், அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சுய வரி விதிப்பு செய்து கொள்ளும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுச் சான்றையும் ஆண்டுதோறும் புதுப்பிக்கத் தேவையில்லை. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில், சமையல் எண்ணெய், பயறு வகைகள், வெல்லம் உள்ளிட்ட பொருள்களின் விற்பனைக்கு வழங்கப்பட்ட வரிவிலக்குச் சலுகைகள் அனைத்தும் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திலும் தொடர்கிறது. இத்தகைய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் உற்பத்தியாளர்களுக்கும் வணிகர்களுக்கும் பயனளிக்கும் வகையிலும் மற்றும் பொருட்களின் விலைகளை குறைக்கும் நோக்கத்துடனும் கொண்டு வரப்பட்டன.

7. 1.1.2007 அன்று மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின் பொது விநியோக முறையின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்கப்படும் மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு மற்றும் உரங்கள் மீதான இரண்டாவது மற்றும் அதற்கடுத்த விற்பனைகளுக்கு 1.1.2007 முதல் முழு வரி விலக்கு அளித்து அரசு அறிவிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்துவோர் அடையாள எண் பெறுவதற்கான கால அவகாசம் 15.2.2007 வரையிலும் நீட்டிக்கப்பட்டது; வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்காக, 31.12.2006 அன்று இருப்பில் உள்ள சரக்குகள் குறித்த படிவங்கள் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 28.2.2007 வரை நீட்டிக்கப்பட்டது.

8. வரிச்சலுகைகள், உள்ளீட்டு வரி வரவு மற்றும் குறைந்த வரி விகிதங்களின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவு வரி இழப்பு ஏற்படும். குறைந்த வரிவிகிதங்கள் மற்றும் உள்ளீட்டு வரி வரவு வசதி ஆகியவற்றின் காரணமாக பொருட்களின் மீதான வரிச்சுமை குறைவதனால் வணிகர்கள் இந்த பலன்களை நுகர்வோருக்கு அளிப்பார்கள் என்றும் அதனால் பொருட்களின் விலை குறையும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த சூழ்நிலையை சில நியாயமற்ற நபர்கள் தன் சுயநலத்திற்காக பயன்படுத்தாமலிருப்பதை உறுதி செய்வதற்கும், மதிப்புக் கூட்டு வரியின் பலன்கள் நுகர்வோரைச் சென்றடையாமல் பொருட்களை அதிக விலைக்கு விற்பதைத் தடுக்கவும், இதனை கண்காணிக்கும் பொருட்டு அரசு ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வணிகவரித்துறை மற்றும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்களுக்கும் ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

9. மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப் பட்ட பிறகு, வணிக மற்றும் தொழில் நிறுவனங்களிடமிருந்து சில பொருட்களின் மீதான வரி விலக்கு – சில வீட்டு உபயோகப் பொருட்கள், தொழிலக உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் மீதான 12.5 சதவீத வரியினை 4 சதவீதமாகக் குறைத்தல் – உள்மாநிலத்தில் நுகர்வதற்கும், உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கும் பொருட்களை உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்வதைத் தவிர்ப்பதற்கான வழிவகை செய்தல் – ஆகியவை தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. மேலும், 27.2.2007 அன்று வணிக மற்றும் தொழில் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

**10.** தமிழகத்தில் **3,89,956** வணிகர்கள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பதிவுப் பெற்ற வணிகர்களாக இருந்தனர். இவர்கள் தாங்களாகவே தனது வரிசெலுத்துவோர் அடையாள எண்ணை (Taxpayer Identification Number) வணிகவரி இணைய தளத்தின் மூலம் **15.11.2006** முதல் உடனடியாகப் பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டது. மேலும் அவ்வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் புதிய பதிவுச் சான்றிதழினை **1.1.2007** முதல் பெற உரிய விண்ணப்பப் படிவத்தினை முன்னதாகவே தாக்கல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டது. எனினும் வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் பதிவுச் சான்று பெற விண்ணப்பங்களை **15.2.2007** வரை தாக்கல் செய்யலாம் என கால அவகாசம் நீட்டிக்கப்பட்டது.

**11.** **2006**—ஆம் ஆண்டில் வணிகர்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துள்ள சரக்குகளை விற்பனை செய்யும்போது ஆறு மாதங்களுக்குள் அதாவது **30.6.2007**—க்குள் உள்ளீட்டு வரிவரவு செய்து கொள்ளலாம். சரக்குகள் குறித்த படிவங்கள் தாக்கல் செய்வதற்கு வணிகர்களுக்கு **28.2.2007** வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**12.** வணிகவரித் துறைக்காக தனி வலைத்தளம் www.tnsalestax.com செயல்பட்டு வருகிறது. இது தவிர www.tnvat.gov.in என்ற புதிய இணைய தளம் ஒன்று டிசம்பர் **2006** முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் வணிகர்கள் தங்களது வரிசெலுத்துவோர் அடையாள எண்ணையும், புதிய பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பத்தையும் பெற்றனர். மேலும் இந்த இணைய தளத்தில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், விதிமுறைகள், சுற்றறிக்கைகள், வணிகவரித் துறை தொடர்பான புள்ளி விவரங்கள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், மதிப்புக் கூட்டு வரியை கணக்கிடுவதற்கான உதாரணங்கள், மாதாந்திர படிவங்களை பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள், வரிவிகிதம் தொடர்பான வணிகர்களின் கேள்விகளுக்கான விளக்கங்கள் ஆகியவை அவ்வப்போது தரப்பட்டுள்ளன. இவை வணிகர்களுக்கு பெரிதும் பயனுள்ளவையாக உள்ளன. மேலும் வணிகர்கள் கணினி முறையில் மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்வது தொடர்பாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வணிகர்கள் பற்றிய குறிப்பு (Dealer Master), பதிவுச் சான்றிதழ் குறிப்பு மற்றும் **31.12.2006** அன்று உள்ள உள்ளீட்டு வரிவரவு தொடர்பான மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டு வரிவிதிப்பு அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மதிப்புக் கூட்டு வரி நடைமுறையை விரைவுபடுத்தவும் எளிதாக்கவும் வணிகர்களுக்கு உடனடியாக தெரிவிக்கவும் அரசு **520** கணினி உதவியாளர்கள் (System Operators) மற்றும் **10** கணினி மேலாளர்கள் (System Managers) ஆகியோரை பணியமர்த்த உள்ளது. இதேபோல் ஏற்றுமதியாளர்கள் செலுத்திய வரியை விரைவாக திருப்பித்தர **11** சிறப்பு வரிவிதிப்பு அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**13.** மதிப்புக் கூட்டு வரியினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து அரசுக்கு தெளிவுபடுத்த வணிகவரித்துறை அமைச்சர் தலைமையில் ஆறு துறை சார்ந்த உறுப்பினர்களும் மற்றும் நான்கு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களும் கொண்ட ஒரு ‘‘மதிப்புக் கூட்டு வரி கண்காணிப்புக் குழு‘‘ தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் வணிகப் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர். **27.2.2007** அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் முந்தைய தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், **1959**—ன் கீழ் வரி விலக்களிக்கப்பட்டிருந்த

இனங்கள் மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், 2006–ன் கீழும் நீட்டித்தல் மற்றும் அன்றாடம் பயன்படுத்தப்படும் வீட்டு உபயோகப் பொருட்களின் மீதான வரி விகிதம் 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக மாற்றுதல் மற்றும் மேலும் பல பொருட்களை தொழிற்காலைகளுக்கான இடுபொருட்களாகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பட்டியலில் சேர்க்க கலந்தாலோசிக்கப்பட்டது.

## 2007–2008 – ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்ட வரிச்சலுகைகள்

14. 27.2.2007 அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு பின்வரும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. குடும்பத் தலைவிகள், சாதாரண மக்கள் மற்றும் விவசாயிகள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களுக்கு வரிவிதிப்பு கூடாது என்ற தமிழக அரசின் கொள்கைக்கிணங்க சில பொருள்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி ரத்து செய்யப்படும்:

- மண்ணெண்ணெய் பிரஷ்ஷர் ஸ்டவ்
- 'உள்ளூர் வரி' செலுத்தப்பட்ட இரசாயன உரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கலப்பு உரக் கலவைகள்
- விதைப்பதற்காக மட்டும் உபயோகப்படுத்தப்படும் அனைத்து விதைகள்
- முத்திரையிடப்பட்ட (sealed) கேன்கள் மற்றும் பாக்கெட்டுகளில் விற்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- கொப்பரை நீங்கலாக மாநிலத்தின் உள்ளும் வெளியிலும் விற்கப்படும் தேங்காய்
- பட்டாணி மாவு
- வறுத்த பட்டாணி
- தேங்காய் சிரட்டைத் தூள்
- பஞ்சாமிர்தம், நாமக்கட்டி, விபூதி மற்றும் பிரசாதம்
- குறிப்பிட்ட 38 வகை நாட்டு மருந்துகள்
- கடல் சிப்பி மற்றும் கடல் பாசி, அகர் அகர் மற்றும் அல்ஜினேட்
- செயற்கை வைரங்கள்
- தஞ்சாவூர் தட்டு
- துணிப்பை
- வரைபட மற்றம் பகுப்பாய்வு உபகரணங்கள்
- பயிற்சி நோட்டு புத்தகம் மற்றும் வரைபடப் புத்தகம்
- கணக்குப் பயிற்சி உபகரணங்கள்
- மரத்திலான பென்சில், பென்சில்கள், அழிப்பான்கள், எபோனைட் பேனாக்கள், எபோனைட் பந்து முனைப் பேனாக்கள் (Ball point pens), மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை

- ஆலையில் தயாரிக்கப்படாத, கைத்தறி மற்றும் விசைத் தறிகள் மூலம் தயாரிக்கப்படும் தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள்
- அனைத்து வகை கற்பூரம்
- முந்திரித் தோல்
- மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சமையல் எண்ணெய்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்களுக்கும் விரிவாக்கப்படும்.
- சமையல் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், புண்ணாக்கு மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட புண்ணாக்கு உள்ளிட்ட வகைகளுக்கு 2000–ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விற்பனை வரி விலக்குக்கான ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்படும்.
- கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பருப்பு மற்றும் பயறு வகைகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், மொச்சை, காராமணி, தட்டைப் பயறு, கொள்ளு மற்றும் அவரை ஆகியவற்றிற்கும் விரிவாக்கப்படும்.
- பருப்பு மற்றும் பயறு வகைகள் ஒவ்வொன்றுக்கும் 2000–ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்படும்.
- கோதுமை மீதான 4 சதவீத வரி 2 சதவீத வரியாக குறைக்கப்படும்.
- நட்சத்திர தகுதி பெறாத உணவகங்கள் மற்றும் இனிப்பகங்களால், வரி செலுத்தி கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட பாட்டில் குடிநீருக்கான (Bottled Mineral Water) வரிவிகிதம், ஏற்கனவே வரி செலுத்தியிருந்தால் மறு விற்பனையின்போது 2 சதவீதமாகக் குறைக்கப்படும்.

சாதாரண மக்களால் உபயோகப்படுத்தப்படும் பின்வரும் பொருட்களுக்கான வரிவீதம் 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

- உடனடி காஃபி நீங்கலாக சிக்கரி மற்றும் வணிகச் சின்னமிடாத காஃபி தூள்
- வணிகச் சின்னமிட்ட மசாலா பவுடர்
- மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், மாவு, மரவள்ளிக் கிழங்கு திப்பி
- பஜ்ஜி மாவு
- வணிகச் சின்னமிடாத நெய்
- பேரீச்சம்பழப் பாகு (syrup)
- Interesterified தாவர எண்ணெய் (வனஸ்பதி)
- வணிகச் சின்னமிடாத பன், ரஸ்க், பிஸ்கட், கேக் போன்ற பேக்கரி பொருட்கள்
- நோய் அறிதற்கான சோதனைக் கருவிகள் மற்றும் சோதனைக்கான வேதிப் பொருள்கள் (reagents), துணைப் பொருள்கள், இரத்தம் சேமிக்கும் பைகள் மற்றும் ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தற்குரிய சிகிச்சைப் பொருள்கள் (disposables)

- மாவு அரவை இயந்திரங்கள் (wet grinders)
- RCC பைப்புகள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி)
- RCC மூலம் தயாரிக்கப்படும் கிராதிகள், கதவு மற்றும் ஜன்னல் பிரேம்கள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி)
- வணிகச் சின்னமிடாத ஸ்டீல் பர்னிச்சர் (unbranded steel furniture)
- கதவுகள், ஜன்னல்கள், சட்டங்கள், புரோபைல்கள், மோட்டார் வாகன, தொழில் மற்றும் கழிவு நீக்க உபகரணங்கள் நீங்கலான பிளாஸ்டிக் பொருட்கள்
- குத்து விளக்கு, அகல் விளக்கு, பாவை விளக்கு, யானை விளக்கு, கார்த்திகை விளக்கு, கோவில் மணி, கற்பூரத் தட்டு, தூபக்கால்
- வார்ப்படச் சிலைகள்
- பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஒலி நாடாக்கள்
- கணக்குப் பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புகள்
- பள்ளிக்கூடப் பைகள் மற்றும் பயணத்திற்குப் பயன்படும் வணிகச் சின்னமிடாத பைகள் (travel bags)
- கேடயங்கள்
- முள்வேலி கம்பி, கம்பி வடம் மற்றும் கம்பி இணைப்புகள்
- பருத்தி நூலினாலான தரைத் துடைப்பான்கள்
- உபயோகப்படுத்தப்பட்ட சீருந்துகள் / மோட்டார் வாகனங்கள் (உள்ளீட்டு வரிவரவு வசதியின்றிக் கூட்டிய மதிப்பிற்கு மட்டும்)
- நெசவு எந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்கள்
- ஆணிகள், புஷ்கள், வாஷர்கள், ரிவிட் போன்ற இணைப்பான்கள்
- எலக்ட்ரோப்ளக்ஸ் (Electroflux)

தொழிற்காலைகளுக்கான இடுபொருட்களாகப் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருட்கள் 4 சதவிகித வரிவீதத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

- தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உயர்ரக மண்ணெண்ணெய் (Superior kerosene oil) (இது உள்ளீட்டு வரி வரவுக்கு உரியதல்ல)
- ஏற்கனவே 20 சதவீதத்தில் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள, குறிப்பிட்ட இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதற்காகக் கொள்முதல் செய்யப்படும் கரும்புச் சாற்றின் கழிவு (molasses) (இது உள்ளீட்டு வரி வரவிற்கு உரியதல்ல).
- தொழிற்சாலைகளுக்கான வாயுக்கள் (Industrial gases), நெசவு இயந்திர உதிரி பாகங்கள் போன்ற தொழிற்சாலை இடுபொருள்களை உற்பத்தியாளர்கள் அல்லது வணிகர்கள் தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருட்களாக விற்பனை செய்யும் போது 4 சதவீத வரி விதிப்புக்குட்படுத்தப்பட்டு பட்டியலிடப்படும்.
- 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், முதலாம் அட்டவணையில் உள்ள பகுதி B–யின் பதிவு 67, குறிப்பிட்ட பொருள்களை, தொழில் உள்ளீட்டுப் பொருட்களாக அறிவிக்க வகை

செய்கிறது. இதன் கீழ், ஏற்கனவே 27 பொருட்கள் தொழில் உள்ளீட்டுப் பொருட்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக காலவரையறையின்றி அறிவிக்கைகள் வெளியிடப்படுவதற்குப் பதிலாக, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 முதலாம் அட்டவணையில் பகுதி–Bயில் இனம் 67–ஐ பின் வருமாறு திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில், இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள பொருட்கள் தவிர்த்து, மாநிலத்தில் ஏனைய பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் அல்லது தயாரிப்புத் தொடர்பாக உபயோகப் படுத்தப்படுகின்ற நுகர் பொருட்கள், சிப்பமிடற்குத் (packing) தேவையான பொருட்கள் மற்றும் லேபிள்கள் உட்பட, இயந்திரத் தளவாடங்கள்; எத்தில் ஆல்கஹால்; அப்சல்யூட் ஆல்கஹால்; மீத்தைல் ஆல்கஹால்; சுத்திகரிக்கப்பட்ட சாராவி; நியூட்ரல் சாராவி மற்றும் சிமெண்ட் நீங்கலாக, முதலாம் அட்டவணையில் பகுதி "C" யில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தப் பொருளும்".

- ஆண்டு விற்பனைத் தொகை ரூ.50 லட்சம் வரையுள்ள வணிகர்களில், அரை விழுக்காடு இணக்கவரி செலுத்துவோர், தற்போது வரிவிலக்களிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைத் தொகை மீதும் வரி செலுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. வரி விதிப்பிற்குள்ளாகும் பொருட்களின் விற்பனைத் தொகை மீது மட்டுமே வணிகர்கள் வரி செலுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் இதற்கத் தேவையான திருத்தம் செய்யப்படும்.
- வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்று, 12.5 சதவிகித விரிவிதிப்பிற்கு உள்ளாகும் பொருட்களை தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில், பிரிவு 'C'–ல் பட்டியலிடப்படும்.

அறிவிக்கப்பட்ட மேற்கூறிய அனைத்து வரிச் சலுகைகளும் 1.1.2007 முதல் நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006–ன் கீழ் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மேற்கூறிய சலுகைகள் அரசாணை எண் (பல்வகை) 79, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 23.3.2007–ல் அறிவிக்கைகளாக வெளியிடப்பட்டுள்ளன.

## <u>மதிப்புக் கூட்டு வரி அமுலாக்கத்தினால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்தல்</u>

**15.** மத்திய அரசு, மாநிலங்கள் மதிப்புக் கூட்டு வரியினை நடைமுறைப்படுத்தும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு, அதாவது 2005–2006ல் 100%, 2006–2007ல் 75% மற்றும் 2007–2008ல் 50% அளவிற்கு வருவாய் இழப்பினை ஈடுசெய்ய முன்வந்துள்ளது. தமிழகத்தில் 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை அமுல்படுத்தியதால் 2006–2007 –ஆம் ஆண்டுக்கு 75% எனவும், 2007–2008–ஆம் ஆண்டுக்கு 50% எனவும் கிடைக்கும் நிலை உள்ளது. எனினும் தமிழக முதல்வர் பிரதமர் மற்றும் மத்திய நிதி அமைச்சருக்கு 2007, 2008, 2009 காலமுறை

ஆண்டுகளுக்கு முறையே 100%, 75%, 50% வருவாய் இழப்பீடு வழங்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார். மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

## மத்திய விற்பனை வரி நீக்கம்

**16.** உற்பத்தித் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. வரும் 2007–2008 நிதி ஆண்டில் மத்திய விற்பனை வரி மூலம் தமிழகத்திற்கு ரூபாய் 2530 கோடி கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மத்திய விற்பனை வரியை படிப்படியாகக் குறைத்து காலப்போக்கில் அறவே நீக்கிவிடுவது என மத்திய அரசு அறிவித்துள்ளது. 1.4.2007 முதல் மத்திய விற்பனை வரிவிகிதம் 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகக் குறைத்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரிக் குறைப்பானது வருடந்தோறும் 1 விழுக்காடு குறைக்கப்பட்டு 1.4.2010 அன்று 0 விழுக்காடாக மாறும். மத்திய விற்பனை வரி நீக்குதலின் பொருட்டு மாநிலங்களுக்கு ஏற்படும் வரி இழப்பினை ஈடு செய்யும் பொருட்டு 77 உள் மாநில சேவைகள் மீதான சேவை வரி விதிக்கும் அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்குவதாக மைய அரசு அறிவித்துள்ளது. புகையிலைப் பொருட்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியை மாநிலங்களே விதித்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சேவை வரி

**17.** சேவை வரி தொடர்பான வரிவிதிப்பு அதிகாரத்தை மைய பட்டியலில் கொண்டு வர இந்திய அரசு அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்துள்ளது. மைய அரசு இந்த அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தினை மறு பரிசீலனை செய்து சேவைகள் மீதான வரிவிதிப்பு அதிகாரத்தை மாநிலப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்பது இந்த அரசின் எண்ணம் ஆகும். மக்களின் சமூக மற்றும் மேம்பாட்டுத் தேவைகளுக்காக மாநில அரசுகளுக்கு போதிய நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. தமிழ் நாட்டில் 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டதாலும், 1.4.2007 முதல் படிப்படியாக மத்திய விற்பனை வரி நீக்கப்படுவதாலும், மாநில அரசுக்கு நிதி ஆதாரங்களை பெருக்குவதற்கான வழிமுறைகள் குறைந்த அளவே உள்ளன. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக சேவைப் பகுதிகள் இருப்பதால், சேவைப் பகுதிகள் மூலமாக மாநில அரசுக்கு உரிய வருவாய் கிடைக்கும். அதனால் மாநில அரசின் வரம்பிற்குள் சேவைகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரம் இருப்பதே விரும்பத் தக்கதாகும். சேவை வரித் தொகையினை மைய அரசுடன் பகிர்ந்து கொண்டாலும், சேவை வரி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.12.2006–ல் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்கள். மேலும், சேவை வரியில் மாநிலத்திற்கான தற்போதைய பங்களிப்பினை 30.5 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காட்டிற்கு உயர்த்தவும், அதில் 39.5 விழுக்காடு அந்தந்த மாநிலத்தில் வசூலிக்கப்படும் சேவை வரி விகிதத்தின் அடிப்படையில் அந்தந்த மாநிலத்திற்கே வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையினை பரிசீலனை செய்யுமாறு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

## மதிப்புக் கூட்டுவரி திட்டத்தில் வருவாய் :

18. தமிழகத்தில் புதிய அரசு கடந்த **13.5.2006** அன்று டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றதும், பல்வேறு தரப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல நலத்திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் அமல்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருவதை மக்கள் அறிவர். மேற்கூறிய திட்டங்களுக்கு தேவைப்படும் அதிக அளவு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிகவரித்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**19.** பிப்ரவரி **2007** வரை அனைத்து சட்டங்களின் மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் **17,601.49** கோடி. சென்ற நிதியாண்டில் இதே காலத்தில் ஈட்டப்பட்ட வருவாயான ரூ.**15001.46** கோடியுடன் ஒப்பிடுகையில், வருவாய் **17.33** விழுக்காடாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**20.** மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகிய வரிகள் இல்லை. மேலும் உயர்ந்த வரி விகிதங்களான **8** விழுக்காடு, **10** விழுக்காடு, **16** விழுக்காடு மற்றும் **20** விழுக்காடு ஆகியவற்றிற்கு பதிலாக **3** வரி வீதங்களே அதாவது **1** விழுக்காடு, **4** விழுக்காடு மற்றும் **12.5** விழுக்காடு மட்டுமே உள்ளன. இதனால் வருவாய் குறையும். ஆனால் உள்ளீட்டு வரி ஈடு செய்யும் வசதியினாலும், குறைந்த வரி விகிதங்களாலும் அனைத்து வணிகர்களும் தாங்களாகவே முன்வந்து வரி செலுத்தும் நிலை ஏற்படும். அந்நிலையில், மதிப்புக் கூட்டு வரி வருவாய் படிப்படியாக உயர வாய்ப்புள்ளது. மதிப்புக் கூட்டு வரி அமலாக்கம் செய்த பிற மாநிலங்களின் அனுபவத்தைப் பார்க்கும்போது, தொடக்கத்தில் சில மாதங்களில் வரி வருவாய் குறைவு ஏற்பட்டுள்ளது என்றாலும், பின்னர் அம்மாநிலங்களில் வரி வருவாய் குறிப்பிடத் தகுந்த அளவில் உயர்ந்துள்ளது.

**21.** மதிப்புக் கூட்டு வரியில் குறைந்த வரிவிகிதங்கள், உள்ளீட்டு வரிக் கழிவு வசதி அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி விலக்கு ஆகிய சலுகைகளின் காரணமாக பொதுமக்கள் வாங்கும் பொருள்களின் மீது வரிச்சுமை குறைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மதிப்புக் கூட்டு வரியினால் பொருள்களின் விலை உயர்கிறது என்ற கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. சில பொருள்களின் விலையுயர்வுக்கு வேறு காரணங்கள் இருக்கலாமேயன்றி மதிப்புக் கூட்டு வரி நிச்சயமாகக் காரணம் அல்ல.

## துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

**22.** வணிகவரித்துறையின் நிர்வாகம், ஆணையர் அவர்களால் திறம்பட நடத்தப்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் இணை ஆணையர்களும், துணை ஆணையர்களும், இணை இயக்குநரும் (புள்ளியியல் & ஆய்வுத்துறை), உதவி ஆணையர்களும், நிர்வாக அலுவலர்களும் உள்ளனர். நிர்வாகக் காரணங்களுக்காக வணிகவரித்துறை பல்வேறு பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது.

## வரிவிதிப்புப் பிரிவு

**23.** வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் ஆகியோர் வரிவிதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு வணிகவரி அலுவலர் தலைமை அலுவலராகவும், 81 வட்டங்களுக்கு துணை வணிகவரி அலுவலர் தலைமை அலுவலராகவும் உள்ளனர். இவை தவிர சென்னையில் நான்கும் கோவையில் இரண்டும் ஆக ஆறு விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்களை தலைமை அலுவலராகக் கொண்டு இயங்குகின்றன. வரிவிதிப்பு அலுவலர்களின் பணி, மாவட்ட அளவில் உதவி ஆணையராலும், கோட்ட அளவில் துணை ஆணையராலும் கண்காணிக்கப்படுகிறது.

## தணிக்கைப் பிரிவு

**24.** ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும், ஒரு உள்ளீட்டுத் தணிக்கைக் குழு உள்ளது. வணிகவரி அலுவலர் ஒருவர் மற்றும் துணை வணிகவரி அலுவலர் ஒருவர் கொண்ட இக்குழு உதவி ஆணையரின் கீழ் செயல்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிற்கும், வரிவிதிப்பு ஆணைகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை, வரிவிதிப்பு வட்ட வாரியாக அறிக்கை தயாரிக்கின்றது. இந்தக் குழுவிற்கான தணிக்கை நிகழ்ச்சி நிரல் துணை ஆணையரால் வகுத்து, கண்காணிக்கப்படுகிறது. அவற்றின் மீதான குறை நிவர்த்திப் பணிகளை சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் கண்காணிக்கின்றனர். இது தவிர, மாநிலக் கணக்காயர், ஆண்டுக்கு ஒருமுறை தனது தணிக்கைக் குழுவினை ஒவ்வொரு வரிவிதிப்பு வட்ட அலுவலகத்திற்கும் அனுப்பி வரிவிதிப்பு கோப்புகள் மற்றும் திரும்ப அளித்தல் தொடர்பான தணிக்கைக் குறிப்பினை தயாரித்து அனுப்புகிறார். அதன் மீது குறை நிவர்த்தி செய்ய வேண்டிய முக்கிய பணி வரிவிதிப்பு அலுவலர்களிடம் உள்ளது. மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குறிப்பின் மீதான குறை நிவர்த்தி என்னும் முக்கிய பணியினை மாநில அளவில் ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (தணிக்கை) கண்காணிக்கிறார்.

## மேல்முறையீட்டுப் பிரிவு

**25.** முதல் மேல் முறையீடு மேல்முறையீட்டு உதவி ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இத்துறையில் இருபது மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக ஆஜராக, வணிகவரி அலுவலர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மை தீர்ப்பாயமும், சென்னை, கோவை, மதுரையில் கூடுதல் தீர்ப்பாயமும் உள்ளன.

## செயலாக்கப் பிரிவு

**26.** செயலாக்கப் பிரிவு ஏழு துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. இது தவிர, இடை மாநில ஆய்வுப் பிரிவில் ஒரு துணை ஆணையர் உள்ளார். துறையின் செயலாக்கப் பிரிவில், பத்து உதவி ஆணையர்களும், பதினான்கு வணிகவரி அலுவலர்களும் உள்ளனர். உதவி ஆணையர் மற்றும் வணிகவரி அலுவலர்களின் கீழ் துணை வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர சுற்றும் படை, இரயில் சரக்கு போக்குவரத்து நிலையங்கள் மற்றும் சரக்குப் பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

**27.** வரி ஏய்ப்பினை கண்டு பிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கை பணியில் ஈடுபடுகின்றனர். சுற்றும் படை, இரயிலக மற்றும் சரக்குப் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் வாகனத் தணிக்கையின் மூலம் பெறப்படும் கொள்முதல் பட்டியல்கள் மற்றும் இதர நடத்துச் சீட்டுகள் உரிய வணிகர்கள் வைத்துள்ள கணக்குப் புத்தகங்களுடன் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினை தடுக்கின்றனர். இடை மாநில ஆய்வுக் குழு அலுவலர்கள், பிற மாநிலங்களில் இருந்து பெறப்பட்ட வடிப்பு நகல்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினை கண்டுபிடித்து வருகின்றனர்.

## தணிக்கைச் சாவடிகள்

**28.** மாநில எல்லையில், இருபத்தாறு எல்லைத் தணிக்கைச் சாவடிகளும், மூன்று உள் தணிக்கைச் சாவடிகளும் உள்ளன. எல்லைத் தணிக்கைச் சாவடிகளில், பத்து பெரிய தணிக்கைச் சாவடிகளும், பதினாறு சிறிய தணிக்கைச் சாவடிகளும் அடங்கும். மூன்று உள் தணிக்கைச் சாவடிகளும் பெரிய தணிக்கைச் சாவடிகள் ஆகும். வணிகவரி அலுவலர்கள் ஐந்து பெரிய எல்லைத் தணிக்கைச் சாவடிகளின் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிகவரி அலுவலர்கள் சோதனைச் சாவடி அலுவலர்களாகவும், உடன் பணிபுரிய உயர் பிரிவு ஆய்வாளர்கள், பதிவுரு எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், பளுதூக்கிகள் ஆகியோர் உள்ளனர்.

## வணிகவரி பணியாளர் பயிற்சி மையம்

**29.** வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் **1982** ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. வணிகவரித் துறையில் பணியுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளருக்கு வணிகவரி சம்பந்தமான சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து பயிற்றுவிக்கப்படுவது இப்பயிற்சி நிலையத்தின் நோக்கம் ஆகும். மேலும் வணிகவரித்துறை கணினிமயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினியை உரிய முறையில் பயன்படுத்த பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு பல்வேறு தலைப்புகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. துணை ஆணையர் நிலையில் இயக்குநர் ஒருவரின் கீழ் இப்பயிற்சி மையம் செயல்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும், உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை

விரிவுரையாளர்களாலும், ஒரு வணிகவரி அலுவலர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி மையத்தில் துறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

- வரிவிதிப்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பயிற்சி
- வரிவிதிப்புக் கோட்பாட்டின் பணியிடைப் பயிற்சி
- கணினிப் பயிற்சி
- அமைச்சுப் பணியாளர்களுக்கான மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி

**30.** வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தில் வணிகவரிகள் குறித்து அவ்வப்பொழுது மாறுபடுகின்ற மற்றும் நடைமுறையில் உள்ள பலவிதமான வரிகள் சம்பந்தமாகவும், புதிதாக **1.1.2007** முதல் இம்மாநிலத்தில் அமுல்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டு வரி சம்பந்தமாகவும் சென்னை கோட்ட அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பிற கோட்டங்களில் அந்தந்த துணை ஆணையர்களின் மேற்பார்வையில் பயிற்சி வழங்கும் அலுவலர்களைக் கொண்டு மதிப்புக் கூடுதல் வரி பயிற்சி அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையம் அமைச்சுப் பணியாளர்களுக்கு துறை சம்பந்தமான கணினிப் பயிற்சி, இணையதளம் மற்றும் மின் அஞ்சல் தொடர்பான பயிற்சியும் வழங்கி வருகிறது. 2007–2008ம் ஆண்டிற்கான புத்தாக்கப் பயிற்சி (Refreshment Course), பணியிடைப் பயிற்சி மற்றும் கணினி பயிற்சிகள், அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பயிற்சி அளிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- துறை சம்பந்தப்பட்டக் கணினி பயிற்சி
- அடிப்படைக் கணினிப் பயிற்சி
- மதிப்புக் கூட்டு வரி பயிற்சி
- பணியிடைப் பயிற்சி

## <u>புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு</u>

**31.** புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, புள்ளியியல் இணை இயக்குநர் தலைமையில் துறை தலைமையிடத்தில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும் ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர். **'வணிகவரித்துறை – ஒரு கண்ணோட்டம்'** மற்றும் **'வணிகவரித் துறை – முக்கிய குறியீடுகள் (மடிப்புத் தாள்)'** ஆகிய இரு வருடாந்திர வெளியீடுகள் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் வெளியிடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் வருவாய் ஈட்டும் முக்கிய **100 வணிகர்கள் / 50 பொருட்களினால்** ஏற்படும் வருவாய் இழப்பிற்கான காரணங்களை ஆராய்ந்து வருகிறது. இது தவிர மதிப்புக் கூட்டு வரி அமுல்படுத்தப்பட்ட பின் அதன் விளைவினை அறிய சுமார் **260 பொருட்களின்** விலையை கண்காணித்து வருகிறது.

## சமாதானத் திட்டம்

**32.** வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் பயன்பெறும் வகையில் வணிகர் நட்புறவான ஒரு சமாதானத் திட்டம் 1.10.2006 முதல் மூன்று மாதங்களுக்கு அமல்படுத்தப் பட்டுள்ளது. 31.12.2006 முடிய உள்ள காலத்திற்கு 1036 மனுதாரர்களிடமிருந்து ரூ.6.98 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

## வரித்தள்ளி வைப்பு வரியை முன்கூட்டியே செலுத்தும் முறை

**33.** வரித் தள்ளிவைப்புப் பலனை அனுபவிக்கும் தொழிற்சாலைகளின் நலனைக் கருதி அரசு 28.2.2007 அன்று முன்கூட்டியே தள்ளிவைக்கப் பட்ட வரியினை செலுத்தும் திட்டத்தினை அறிவித்துள்ளது. அதன்படி முதிர்வடையாத வரித்தள்ளி வைப்புத் தொகையின் தற்போதைய நிகர மதிப்பில் (Net Present Value – N.P.V.) ஆண்டொன்றுக்கு 5 சதவீதத் தள்ளுபடி போக மீதியினை செலுத்த வகை செய்யும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வரித் தள்ளுபடி ஆய்வுக்குழு

**34.** அரசாணை (டி) எண் 428, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 25.8.2006ன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வரித்தள்ளுபடி ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

1. அரசுச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை
2. அரசுச் செயலர், நிதித்துறை
3. ஆணையர் (வணிகவரிகள்)

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தெளிவுரைகளால் வணிகர்கள் கொள்முதல் செய்வோர்களிடமிருந்து வரி வசூல் செய்யாத நிகழ்வுகளில் பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ள வரி கைவிடுதல் பிரேரணைகளை ஆய்வு செய்து முடிவெடுப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 15.11.2006 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் 21 வரித் தள்ளுபடி பிரேரணைகள் பரிசீலணை செய்யப்பட்டு அவற்றில் 19 பிரேரணைகள் வரித் தள்ளுபடிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரண்டு பிரேரணைகள் ஏற்கப்படவில்லை. இவை முறையே ரூ.17.71 கோடி மற்றும் 0.71 கோடி உள்ளடக்கியது. 17 நேர்வுகளில் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் ரூ.30.94 கோடி உள்ளடக்கிய 22 வரித் தள்ளுபடி பிரேரணைகள் அரசின் பரிசீலணையில் உள்ளது.

## வணிகவரித்துறையை கணினிமயமாக்குதல்

### வணிகவரித் துறையில் மின் ஆளுகை

**35.** வணிகவரித் துறையில் கணினி செயல்பாடு முதன் முறையாக 1973ஆம் ஆண்டு கிண்டியில் உள்ள அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் துணையோடு

தொடங்கப்பட்டது. வணிகவரி நமூனாக்களின் விவரங்கள் கணினியில் ஏற்றப்பட்டு மாநில அளவிலான வணிகர்கள் தொடர்புடைய அனைத்து விவரங்களின் தொகுப்பினை தயாரிப்பதற்காகவே தொடங்கப்பட்டது. பின்னர் வருவாய் சார்ந்த துறைகளில் கணினிகளைப் புகுத்தி அவைகளின் செயல்பாட்டினை மேம்படுத்த பதினொன்றாம் வருவாய்க் குழுவினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், வணிகவரித் துறையில் கணினி மயமாக்கலில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டது. இச்சமயத்தில் Pallavan Transport Consultancy Services என்ற நிறுவனம் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டது. **464** இடங்களில் கணிப்பொறி விரிவாக்கத்தின் தொடர்பாக ரூ.**10.51** கோடி செலவில் மென்பொருட்களும், இதனோடு தொடர்புடைய வன்பொருட்களும் வழங்கப்பட்டன.

**36.** இத்துறைக்கான இணைய தளத்தில் "www.tnsalestax.com" என்ற முகவரியில் தனியாக வலைத்தளம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வணிகர்களுக்குத் தேவையான தற்சமயம் வரை உள்ள தகவல்கள் (Uptodate) அளிக்கப்படுகின்றன. வணிகர்கள் பதிவுச் சான்று மனு, மாதாந்திர நமூனாக்கள் முதலான சட்டப்பூர்வ படிவங்களை இந்த வலைத் தளத்தில் இருப்பதை தங்கள் கணினி மூலம் பெற்று பயன்படுத்திக் கொள்ளும் வசதி உள்ளது. அனைத்து வகைப் பொருட்களுக்கான வரி வீதங்கள் அகர வரிசைப்படி வலைத்தளத்தில் உள்ளன.

## துறைக்கான வலைத்தளம்

**37.** இவ்வலைத் தளத்தில் அரசு மற்றும் ஆணையர் வழங்கிய கடிதங்கள், ஆணைகள், அறிவிக்கைகள் முதலியனவும் துறை அலுவலர்களுக்கு உதவும் விதமாய் அனைத்து பொருட்களுக்கான வரி விகிதங்கள் முக்கியமான தீர்ப்புகள் ஆகியவை உள்ளன. வலைத் தளத்தின் மூலமாக மின் அஞ்சல் செய்யவும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலாண்மை தகவல் முறையும் இவ்வலைத் தளத்தில் உள்ளது. **2006–2007** –ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்களை திருவாளர்கள் எல்காட் லிட், மூலமாக கொள்முதல் செய்வதற்கு அரசு ரூபாய் **500** லட்சங்கள் நிதி வழங்கியுள்ளது.

1. வன்பொருள் கொள்முதல் – அனைத்து மேல்முறையீடு மற்றும் வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளிட்ட நிர்வாக அலுவலகங்களுக்கு கணினிகள், அச்சு இயந்திரங்கள், தடையற்ற மின் வழங்கிகள்.

2. மதிப்புக் கூட்டு வரி தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் சந்தேகங்களுக்கான விடையளிக்க சென்னையில் அழைப்பு மையம் அமைத்தல்.

3. பதிவு செய்தல், வணிகத் தொகை விவர அறிக்கைகள் (returns), உள்ளீட்டு வரி திரும்பக் கோரல் (claim of input tax credit) மற்றும் கணினி மூலம் சேவை தொடர்பான விவரங்களை வணிகர்களுக்கு வழங்கல் போன்ற பணிகளுக்கு, ஒவ்வொரு கோட்ட / வட்ட அலுவலக தலைமையிடத்திலும் உதவி மையம் (Help Desk) அமைத்தல்.

4. கிரீம்ஸ் சாலையிலுள்ள சென்னை மைய சர்வர் மற்றும் பெசன்ட் நகரிலுள்ள தேசிய தகவல் நிறுவனத்திற்கு இடையே ஒரு குத்தகை இணைப்பு (leased line) பெறுதல்.

5. கிரீம்ஸ் சாலையிலுள்ள மைய சர்வர் மற்றும் வணிகவரி ஆணையர் அலுவலகத்திற்கிடையே ஒரு ISDN இணைப்பு பெறுதல்.

6. வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் தொகை விவர அறிக்கைகளை (ICR sheets) ஸ்கேனர் மூலம் அனுப்பி வைக்கப்படும் அதிவிரைவு ஸ்கேனர்கள் கொள்முதல் செய்தல்.

7. ஒவ்வொரு வரிவிதிப்பு வட்டத்திற்கும் மற்றும் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் LAN இணைப்பு வழங்குதல்.

## மின் ஆளுகை மூலம் மதிப்புக் கூட்டு வரி அமுலாக்கம்

**38.** தமிழ் நாட்டில் மதிப்புக் கூட்டு வரி அமுலாக்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், **1959**ன் கீழ் பதிவு பெற்ற அனைத்து வணிகர்களுக்கும் வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) வழங்கப்பட்டு வருகிறது. அதற்கென தனியான மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. **www.tnvat.gov.in** என்ற வலைத்தளம் திருவாளர்கள் NIC அவர்கள் உதவியுடன் உருவாக்கப்பட்டு அதில் TIN சம்பந்தமான தகவல்கள் ஏற்றப்பட்டுள்ளது. இவ்வலைத்தளத்தின் மூலம் வணிகர்கள் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு செல்லாமலேயே TIN சம்பந்தமான தகவல்களைப் பெற முடியும். **2** லட்சத்திற்கும் மேற்பட்ட வணிகர்கள் இவ்வசதியை பயன்படுத்தி வருகின்றனர். மதிப்புக் கூட்டு வரிவிதிப்பில் பதிவு செய்தல் மற்றும் நமூனாக்கள் பதிவு செய்யும் மென்பொருள் உருவாக்கப்பட்டு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. பதிவு செய்தல் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் மனித குறுக்கீடு இல்லாமல் முழுமையாக கணினிமயமாக்கப் பட்டுள்ளது. பெரிய வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரி சூழலில் இரண்டு முறையில் நமுனாக்களை தாக்கல் செய்யலாம். ஒன்று, மின் அஞ்சல் மூலமாக தாக்கல் செய்தல், மற்றொன்று ICR படிவம் மூலமாக தாக்கல் செய்தல். மதிப்புக் கூட்டு வரி நமுனாக்களில் உள்ள விவரங்கள் ஸ்கேனர் மூலமாக கிரகிக்கப்படுகின்றன. "www.tnvat.gov.in" என்ற வலைத் தளத்தின் மூலமாக பதிவு எண்கள் வழங்குதல், நமுனாக்கள் பெறுதல் ஆகிய பணிகள் திருவாளர்கள் தேசிய தகவல் மையத்திடம் (NIC) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மின் ஆளுகை

**39.** திருவாளர்கள் விப்ரோ இன்ஃபோடெக் நிறுவனம் நமது மாநிலத்தில் கீழ்க்காணும் மின் ஆளுகைப் பணிகளை செயல்படுத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது.

1. வரி செலுத்துதல், வாகனங்கள் கண்காணிப்பு, அனைத்து சோதனைச் சாவடிகளை கண்காணித்தல், விற்பனை, கொள்முதல் சரிபார்த்தல், கருவூலங்களில் தொகை சரிபார்த்தல் ஆகியவற்றுக்கான நடைமுறையை எளிமைப்படுத்துதல்.
2. ஐ.சி.ஆர். தொழில் நுட்பம்.
3. எதிர்வரும் 'டினஸ்வான்' (TNSWAN) சூழ்நிலைக்கேற்ற இணைப்புகளை அமைத்தல்.
4. துறையில் மின் ஆளுமை (e-Governance) செயல்படுத்த ஏதுவான அமைப்புகள்.
5. மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி
6. துறையினை இரண்டாம் கட்ட கணினி மயமாக்குதலுக்கு தயார் படுத்துதல் மற்றும் உறுதியான விவரங்கள்

**40.** திருவாளர்கள். விப்ரோ நிறுவனத்தின் இறுதி வரைவு திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக விரைவில் அனுப்பி வைக்கப்படும். மின் ஆளுகையின் அடுத்த நடவடிக்கையாக தணிக்கைச் சாவடிகளில் ஆவணங்களை விரைவாக சரிபார்த்தல், அதன் விளைவாக நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து தடையின்றி நடைபெறுதல், மின் அஞ்சல் மூலமாக நமூனாக்கள் தாக்கல் செய்தல் மற்றும் வரி செலுத்துதல் போன்ற இனங்களில் மின் ஆளுகை முறை அறிமுகப்படுத்தப்படும். சட்ட நடவடிக்கைகள் நீங்கலாக மற்ற அனைத்து அலுவலக வேலைகளும் காகிதப் பயன்பாடற்ற நிலை உருவாகும். திருவாளர்கள். தேசிய தகவல் மையம் மற்றும் எல்காட், சென்னை, மின் ஆளுகை மூலமாக நமுனாக்கள் பெறப்படுதல், வரி செலுத்துதல், பதிவு எண் பெறுதல் மற்றும் இதனோடு தொடர்புடைய வலைத்தகவல்கள் அளித்தல் ஆகியவற்றை செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

## வணிகர் நல வாரியம்

**41.** வணிகர் நலன் கருதி வணிகர் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்கான வணிகர் நல வாரியம் அரசாணை (நிலை) எண்.725 வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் **25.9.1989—ல்** முதலில் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும் மாண்புமிக வணிகவரித் துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்டு அரசு ஆணை (நிலை) எண், **142,** வணிகவரித்துறை, நாள் **13.11.2006—ன்படி** இவ்வாரியம் திருத்தி அமைக்கப்பட்டது. வாரியத்தின் உறுப்பினர்களாக, அலுவலர் சார்பாக **5** உறுப்பினர்களும் வணிகர்கள் சார்பாக **20** அலுவல்—சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வாரியத்தின் உறுப்பினராகும் தகுதி எல்லா பதிவு பெற்ற வணிகர்களுக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.**250/—** ஆண்டு கட்டணமாக செலுத்த வேண்டும். **28.2.2007** முடிய **44,442** உறுப்பினர்கள் மூலம் ரூபாய்.**1.11** கோடி பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை **3010** அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**42. 13.3.2007** அன்று வணிகர் நல வாரிய பத்தாவது கூட்டம் நடைபெற்றது. வணிகர் நல வாரியம் மூலம் **28.2.2007** முடிய உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | உதவி விபரம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | குடும்ப நல உதவி<br>ரூ.20,000/– வீதம் இறந்து போன உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு உதவி | 279 | 70.55 |
| 2. | மருத்துவ உதவி<br>ரூ.25,000/– வரை உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி | 33 | 7.36 |
| 3. | கல்வி உதவி<br>ரூ.3,000/– வீதம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி | 77 | 1.98 |
| 4. | விளையாட்டு உதவி<br>ரூ.3000லிருந்து ரூ.25000/– வரை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 5. | திருமண உதவித் தொகை (தற்போது அமுலில் இல்லை) | 2 | 10 |
| 6. | தீ விபத்து உதவி<br>ரூ.5000 வீதம் உறுப்பினர்களின் கடைகள் மற்றும் கிடங்குகளுக்கு தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 7. | ஊணமுற்றோருக்கான உதவி<br>ரூ.20,000/– வரை உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவி | 2 | 0.15 |
| 8. | உயர்மதிப்பெண் பெற்றவர்களுக்கான உதவி ரூ.5000/– வரை<br>உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான உதவி | 6 | 0.20 |
| | **மொத்தம்** | **430** | **81.94** |

## குறை களைதல்

### குறை தீர்க்கும் பிரிவு

**43.** வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் பிரிவு ஒன்று 1999 முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும் புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

## தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

**44.** துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொதுமக்களின் ஆலோசனைகள், குறைகள் மற்றும் வணிகர்களின் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெறும் பொருட்டு, 'தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி' ரூ.2,00,000/– செலவில், அரசு ஆணை எண் 246, வணிகவரித்துறை நாள் 17.12.2003 மூலம் வணிகவரி ஆணையர் அவர்களின் அறையில் பொருத்தப்பட்டு, 20.02.2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வசதிக்கென தனியாக 044–28520535 எண்ற எண் கொண்ட நேரடி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## வணிகவரித் துறையின் சிறந்த நிர்வாகத்திற்கென எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள்

ரொக்கப் பரிசு

**45.** வணிகவரித்துறையில் பணிபுரியும் அலுவலர்களின் திறமையை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், துறையில் சிறப்பாகச் செயல்படும் 6 அலுவலர்களுக்கு தலா ரு.25,000/– ரொக்கப் பரிசும் பாராட்டுச் சான்றும் வழங்கும் திட்டம் நவம்பர் மாதம் 2003 முதல் தொடங்கப்பட்டது. 2003–2004ம் ஆண்டில் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

## வரி ஏய்ப்பு குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு ரொக்கப் பரிசு

**46.** ரூ.1 லட்சம் நிதித் தொகுப்புடன் கூடிய ரொக்கப் பரிசு வணிகவரி ஆணையரால் வரி ஏய்ப்பவர் பற்றிய மதிப்புமிக்க தகவல்களை துறைக்கு அளிக்கும் துறைசாரா நபர்களுக்கு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் மதிப்புமிக்க தகவல்கள் செயலாக்கப் பிரிவினரால் பரிசீலிக்கப்பட்டு, வரிவிதிப்பாக முடிகிறது. அளிக்கப்பட்ட தகவல்கள் இரகசியமாக பாதுகாக்கப்படுகின்றது.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

**47.** 31.12.2006 வரை தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005ன் கீழ் 63 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 46 விண்ணப்பங்களின் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி II திட்டம் 2007–2008

**48.** 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி – II திட்டத்தில் கீழ்க் காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

1. ரூ.1.65 லட்சம் செலவில் பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டிடத்தில் வெளியாட்களைக் கொண்டு கழிவறைகளை சுத்தம் செய்தல்.

2. ரூ.2.08 லட்சம் செலவில் பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டிடத்தில் நான்கு மாடிகளிலும் இரு புறங்களிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம்

3. ரூ.0.60 லட்சம் செலவில் சென்னை (வடக்கு) இணை ஆணையர் (வணிகவரி) அலுவலகத்தில் நகலெடுக்கும் இயந்திரம் வழங்குதல்.

4. ரூ.4.06 லட்சம் செலவில் அறைகலன்கள் கொள்முதல் செய்தல்

5. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு ரூ.5.98 லட்சம் செலவில் LCD புரஜக்டர், ஒரு Risograph நகலெடுக்கும் இயந்திரம், நான்கு குளிர் சாதனப் பெட்டிகள் வாங்குதல் மற்றும் அறைகலன்கள் கொள்முதல் செய்தல்.

6. மாவட்ட அளவில் ரூ.19.35 லட்சம் செலவில் மதிப்புக் கூட்டு வரி பற்றிய பயிற்சி முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்.

7. வணிகவரி ஆணையர் அலுவலகத்தை நவீனமயமாக்குதல் – ரூ.20 லட்சம் செலவில் 34 பிரிவுகளுக்கான கனசதுர அறைகள் அமைத்தல்.

8. ரூ.1.50 லட்சம் செலவில் மதிப்புக் கூட்டு வரி கண்காணிப்பு குழுவிற்கு கூட்ட அரங்கம் அற்றம் குளிர்சாதனப் பெட்டி அமைத்தல்

மேற்கண்ட 8 திட்டங்களுக்கும் ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

## மதிப்புக் கூட்டு வரி பற்றிய விளக்கக் குறிப்பு :

**49.** மதிப்புக் கூட்டு வரி குறித்து ஒரு விளக்கக் குறிப்பு அச்சிடப்பட்டு தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## மக்கள் சாசனம்

**50.** 2007–2008 ஆம் ஆண்டிற்கான வணிகவரித்துறை தொடர்பான 'மக்கள் சாசனம்' இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**சி.நா.மீ. உபயதுல்லா**
வணிகவரித்துறை அமைச்சர்.